TSI8T

# தென்காசி மாவட்டம்

## முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

-----

## வகுப்பு 8

நேரம்: 1.30 மணி

தமிழ்

மதிப்பெண்கள்: 50

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **5×1=5**

1) மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ..............

அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

2) இயற்கையைப் போற்றுதல் தமிழர் ..............

அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

3) வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ..............

அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு ஈ) கழுத்து

4) 'நன்செய்' - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............

அ) நன்+செய் ஆ) நன்று+செய் இ) நன்மை+செய் ஈ) நல்+செய்

5) செவ்விந்தியர்கள் நிலத்தைத் .............. மதிக்கின்றனர்.

அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:** **3×1=3**

6) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ..............

7) பால்+ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..............

8) வலியில் நிலைமையான் வல்லுருவம் ..............
புலியின் தோல் .............. மேய்ந் தற்று.

**இ) அடிபிறழாமல் எழுதுக:** **3+2=5**

9) 'வாழ்க நிரந்தரம்' எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப்பாடலை எழுதுக.

10) தக்கார் .......... எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**ஈ) எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக:** **6×2=12**

T. SIVAKUMAR
9943340047

11) தமிழ் எங்குப் புகழ்கொண்டு வாழ்கிறது?

12) செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?

13) ஓவிய எழுத்து என்றால் என்ன?

14) மெய்யெழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

15) ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?

16) புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?

17) தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

18) சான்றோர்க்கு அழகாவது எது?

**உ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை எழுதுக:** **2×4=8**

19) தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

20) கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

21) எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

1×5=5

ஐ) விரிவான விடையளிக்க:

22) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

(அல்லது)

'வெட்டுக்கிளியும் சருகுமானும்' - கதையைச் சுருக்கி எழுதுக.

1×6=6

எ) கட்டுரை வடிவில் விடையளிக்க:

23) 'நான் விரும்பும் கவிஞர்' - என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

3×2=6

ஏ) அனைத்திற்கும் விடையளிக்க:

24) சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுக்க:

அ) பால் ............ (குடி / பருகு)

ஆ) பூ ............ (கொய் / பறி)

25) அடிக்கோடிட்ட எண்களுக்கான தமிழெண்களை எழுதுக:

அ) உலக ஓசோன் நாள் செப்டம்பர் <u>16</u> ............

ஆ) உலக வனவிலங்கு நாள் அக்டோபர் <u>6</u> ............

26) தொடர்களை மாற்றுக:

அ) காடு மிகவும் அழகானது. (உணர்ச்சித் தொடராக மாற்றுக)

ஆ) காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. (வினாத் தொடராக மாற்றுக)

----------

www.Padasalai.Net